பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 09 புதன்கிழமை 24.12.2025 கதிர் 046

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணி ஆகியவற்றின் தலைவர்களுக்கும் இந்திய அயலுறவுத்துறை ☞ 2

# இலங்கையின் நம்பரகமான நண்பனான இந்தியா அனைத்து ஆதரவையும் தரும்

## அரசுத் தலைவர் அநுரவுக்கு இந்தியப் பிரதமர் மோடி செய்தி

இலங்கை தற்போது பேரிடரிற்குப் பின்னரான அடுத்த கட்டம் குறித்துக் கவனம் செலுத்தியுள்ள வேளையில், நம்பகமான பங்காளியாகவும் நம்பகமான நண்பராகவும் இந்தியா சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்கும் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இலங்கை மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் அவர்களின் தாங்கிக் கொள்ளும்



சக்தியை உறுதிப்படுத்துவதில் கடந்த காலத்தைப் போன்றே நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் நிற்போம். இந்தச் சூழலில், இந்தியா ஒரு விரிவான சலுகைப் பொதியை வழங்குகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சலுகைப்பொதி எவ்வாறு சிறப்பாக செயல்படுத்தலாம் என்பது குறித்து உங்கள் ஆளும்தரப்புடன் கலந்துரையாடுமாறு அமைச்சர் ஜெய்சங்கருக்கு அறிவித்துள்ளோம் என இந்திய பிரதமர் நரேந்திர ☞ 2

### பேரிடரைக் காரணங் காட்டி

## மாகாண சபை தேர்தலை பிற்போடாமல் விரைவாக நடத்த அழுத்தம் கொடுங்கள்

### கொழும்பு வந்த ஜெய்சங்கரிடம் தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து

'தித்வா' பேரிடரைக் காரணங் காட்டி மாகாணசபைத்தேர்தல்களைப்பிற்போடாமல் விரைந்து நடத்துவதற்கு இலங்கை ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுக்குமாறு வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் பல இணைந்து இந்தியாவின் அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் கோரியிருந்தன.

அதுமாத்திரமன்றி 'தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு, பொதுத் தேர்தல் மூலம் தெரிவானநாடாளுமன்றஉறுப்பினர்களையும், நாம் ஆட்சியமைத்திருக்கும் உள்ளுராட்சி மன்றங்களையும் முழுமையாகப் புறக்கணித்துவிட்டு, 'பிரஜா சக்தி' எனும் பெயரில்ஏதோவொருதிட்டத்தைமுன்னெடுத்து வருகின்றது. இருப்பினும் அது எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பது ☞ 2

## வெளிப்படைத் தன்மையுடன் உதவி மக்களைச் சென்றடையவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித்திடம் ஜெய்சங்கர் தெரிவிப்பு

'தித்வா' சூறாவளிஏற்படுத்தியபேரிடலிருந்து மீள்வதற்காக இந்திய ஆளும்தரப்பு வழங்கிய உதவிகள்மிகவும்வெளிப்படைத்தன்மையுடன் மக்களைச்சென்றடையவேண்டும்எனஇந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார். அதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் வழங்கக்கூடிய அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குவதாக எதிர்க்கட்சி சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார்.

ஒரு நாள் உத்தியோகபூர்வ ☞ 2

## இலங்கை மிக விரைவில் மீண்டுவரும் புதுடில்லிக்கு அந்த நம்பிக்கையுண்டு

### அநுரவிடம் தெரிவித்தார் ஜெய்சங்கர்

அரசுத்தலைவர்அநுரகுமாரதிசாநாயக்கவின் தலைமையின் கீழ் இலங்கை மிக விரைவில் மீண்டு வரும் என்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய ஆளும்தரப்பு நம்பிக்கை கொண்டுள்ளது. இலங்கையின் மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துடன் இந்தியா முன்னெப்போதையும்விட அதிக அர்ப்பணிப்புடன் கைகோர்த்துள்ளது என இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அரசுத் தலைவரிடம் தெரிவித்தார்.

கடினமான சமயத்தில் இலங்கையுடன் பலமாக இணைந்திருக்கவும், இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளை வழங்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனக்கு அறிவுறுத்தினார் எனவும், அந்த முயற்சிகளை ஆராய்வதற்காக இந்தியப்பிரதமரின்விசேடபிரதிநிதியாக இலங்கைக்குதான்வருகைதந்துள்ளார் என்றும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பேரழிவுக்குப் பிறகு இலங்கையின் மீளமைப்பு செயற்பாட்டிற்கு வழங்கும் ஒத்துழைப்பு இந்திய-இலங்கை உறவுகளில்ஒருபுதியஅத்தியாயத்தைக் குறிக்கும் என அரசுத் தலைவர் அநுரகுமார .இந்திய அயலுறவுத்துறை அமைச்சரிடம் குறிப்பிட்டார். ☞ 2

## இந்திய 'பெய்லி' பாலம் நேற்று கிளிநொச்சியில் திறந்துவைப்பு

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 'பெய்லி' பாலத்தொகுதிகளைப் பயன்படுத்தி, இந்தியஇராணுவப்பொறியியலாளர்களினால் கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ள 120 அடி நீளமான பெய்லி பாலம் நேற்றைய தினம் அரசுத்தலைவர் அநுரகுமார முன்னிலையில் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் மற்றும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரால்மெய்நிகர்முறையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இருநாள் அரசுமுறைப் பயணமொன்றை மேற்கொண்டுநாட்டுக்கு வருகைதந்திருக்கும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் நேற்று செவ்வாய்க்கிழமை (23) காலை அரசுத் தலைவர் செயலகத்தில் அரசுத் தலைவர் ☞ 6

## ஜெய்சங்கரின் வருகை நட்பின் பிரதிபலிப்பு

### அமைச்சர் விஜித ஹேரத் பாராட்டு

'தித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பேரிடர் நிலைமையைத் தொடர்ந்து, இவ்வேளையில் இலங்கையுடனான இந்தியாவின் வலுவான ஒற்றுமையை அடிக்கோடிட்டுக் காண்பிக்கும் வகையில் அமைந்திருக்கும் அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கரின் வருகை பாராட்டுக்குரியது. இப் பயணம் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்பு மற்றும் நீடித்த கூட்டாண்மையின் பிரதிபலிப்பாகும் என அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ☞ 6

## ஆளும்தரப்புடன் பேசி காணிகளைப் பெறுங்கள் இந்தியா அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்

### மலையகத் தலைவர்களிடம் ஜெய்சங்கர் தெரிவிப்பு

மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டத்தில் இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும். ஆளும்தரப்புடன் பேச்சு நடத்திக் காணிகளை பெற்றுக்கொள்ளுங்கள், வீடுகளை கட்டுவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மலையக தமிழ் அரசியல் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு அரசுமுறைப் பயணமாக வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கரிற்கும், மலையக தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இருதரப்பு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் ☞ 6

## அரசமைப்புச் சபை ஆளும்தரப்புக்கு ஒத்துழைத்துச் செயற்படவேண்டும்

### அறிவுரை கூறுகிறார் அமைச்சர் நளிந்த

அரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் நாடு தொடர்பில் பெரும் பொறுப்பு காணப்படுவதைப் போன்று, அரச பொறிமுறையைக் கொண்டு செல்வதில் அரசமைப்பு சபைக்கும் தவிர்க்க முடியாத பொறுப்பு காணப்படுகிறது. எனவே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளுக்கு ☞ 6

## இனி இது .....

அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையிலான நேற்றைய சந்திப்பில் குறிப்பிடத்தகுந்த எந்த அடைவுகளும் இல்லை. வழக்கமான சந்திப்பு என்பதற்கும் மேலாக இதுவொரு சம்பிரதாயபூர்வச் சந்திப்பு மட்டுமே. இலங்கை வரும்போது எல்லாத் தரப்புக்களையும் சந்திப்பதைப் போலவே வடக்கு கிழக்கு தமிழ்த் தலைவர்களில் சிலரையும் சந்தித்துப் பேசினார் என்பதற்கு அப்பால் இந்தச் சந்திப்பில் எதுவும் இருக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் கோரிக்கைக்குக் கூட இந்திய அமைச்சர் நம்பிக்கை தரும் பதிலைத் தரவில்லை. கஜேந்திரகுமார் தமிழ்நாட்டுக்குச் சென்று, ஏக்கிய ராஜ்ஜியவை கொண்டுவராமல் தடுக்கவேண்டும் என்று முழக்கமிட்டு வந்திருந்தபோதும், நேற்றைய சந்திப்பில் புதிய அரசமைப்பு மற்றும் தீர்வு விடயங்களில் தமிழ்த் தலைவர்கள் சொன்னவற்றுக்கு ம் .ம் கொட்டியதைத் தொடர்ந்து ஜெய்சங்கர் எதுவும் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, மாகாண சபைத் தேர்தலைக்கூட இப்போதைக்கு இலங்கையிடம் வலியுறுத்த முடியாது என்பதே அவரது கருத்துக்களில் தொனித்த விடயம்.

பேரிடர் பாதிப்பிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதில் இந்தியாவின் வகிபாகத்தை உறுதிப்படுத்துவது குறித்தே இந்தியாவின் கவனம் தற்போதைக்கு இருக்கும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

இந்தியா இப்படியே இருந்தால் இலங்கையின் வடக்குகிழக்கில் பாகிஸ்தானும் சீனாவும் காலூன்றி, இந்தியாவிற்கு எதிராக அந்தப் பகுதிகளைப் பயன்படுத்தப் போகின்றன என்று ஜெய்சங்கரிற்கு கிலியை ஏற்படுத்த தமிழ்த் தலைவர்கள் எடுத்த முயற்சியையும் அவர் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. பாகிஸ்தானும் சீனாவும் வடக்கு கிழக்கில் சில இடங்கில் தொடர்ந்து நிலை கொண்டிருப்பதற்கான ஆதாரங்கள் சிலவற்றையும் தமிழ்த் தலைவர்கள் கையளித்தார். ஆனால் அவையெல்லாம் ஏற்கனவே இந்தியத் தூதரகத்திடம் இருக்கும் ஆவணங்கள்தான் என்பதால் அது பற்றியும் அவர் அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. தமிழ்த்தலைவர்களுக்கு அந்த ஆவணங்களை வழங்கிய தரப்பே இந்தியத் தூதரகத்திற்கும் இதுபோன்ற ஆவணங்களை வழங்கி பணமும் பெற்றுக்கொள்வது என்பது ஒன்றும் பரம இரகசியமல்ல.

சீனா, பாகிஸ்தான் பூச்சாண்டி காட்டி இந்தியாவைத் தமிழர் தரப்பை நோக்கித் திருப்ப முடியும் என்பதெல்லாம் இனிக் கனவிலும் நடக்கமுடியாத விடயங்கள் என்பதை தமிழ்த் தலைவர்கள் இனியாவது உணர்ந்துகொண்டு நடக்கவேண்டும். அதற்குத் தேவையில்லாத வகையில் கொழும்புடன் சேர்ந்து வலுவான அடித்தளத்தை புதுடில்லி ஏற்படுத்திவிட்டது. அதுவும்போக, கொழும்பை வழிக்குக் கொண்டுவருவதற்கு தமிழர்களின் பிரச்சினையைப் பயன்படுத்தவேண்டிய தேவைகூட இந்தியாவிற்கு இல்லை என்றாகிவிட்ட பின்னர், இந்தியா தமிழர்களுக்காக உதவிக்கு வரும் என்று நினைப்பது சுத்த முட்டாள்தனம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கையின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோடி அரசுத் தலைவர் அநுரகுமார

உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அனுப்பிய சிறப்பு கடிதத்தை இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் நேற்றுக் கையளித் தார்.

அந்தகடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உங்கள் நாடு' தித்வா 'புயலில் இருந்து மீண்டுவரும் நிலையில், இலங்கையின் உதவி மற்றும் மீளக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு இந்தியா எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து ஆராய்வதற்காக, அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை எனது விசேட பிரதிநிதியாக அனுப்புகிறேன்.

'அயலவருக்கு முன்னுரிமை' எனும் எங்கள் கொள்கை மற்றும் முதலில் பதிலளிப்பவராக இருப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டின்படி, திடீரென ஏற்பட்ட சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக சாகர் பந்து' நடவடிக்கையை நாம் தொடங்கினோம். இந்திய கப்பல்கள், விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் உதவிப் பொருட்களையும் அவசரமாகத் தேவையான பொருட்களையும் கொண்டு வந்தன. அவர்கள் மீட்கும் நடவடிக்கைகளுக்கு உதவியதோடு, அவசர மருத்துவ சேவைகளை வழங்கவும், பாதிக்கப்பட்ட தகவல் தொடர்புக் கட்டமைப்புகளை மீளமைக்கவும் இந்திய விசேட குழுக்கள் அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைக் காப்பாற்ற 'சாகர் பந்து' நடவடிக்கை உதவியதோடு, இது எங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் பரந்த மற்றும் ஆழமான வெளிப்பாடாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இலங்கை தற்போது அடுத்த கட்டம் குறித்து கவனம் செலுத்தியுள்ள வேளையில், நம்பகமான பங்காளியாகவும் நம்பகமான நண்பராகவும் இந்தியா சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்கும் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இலங்கை மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் அவர்களின் தாங்கிக் கொள்ளும் சக்தியை உறுதிப்படுத்துவதிலும் கடந்த காலத்தைப் போன்றே நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் நிற்போம். இந்தச் சூழலில், இந்தியா ஒரு விரிவான சலுகைப் பொதியை வழங்குகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். சலுகைப்பொதியை எவ்வாறு சிறப்பாகச் செயல்படுத்தலாம் என்பது குறித்து உங்கள் ஆளும்தரப்புடன் கலந்துரையாடுமாறு அமைச்சர் ஜெய்சங்கருக்கு அறிவித்துள்ளோம்.

இலங்கை எப்போதும் இல்லாத அளவுக்கு வலிமையாக எழுச்சி பெறும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பயணத்திலும், தேசிய அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தில் இந்தியா எப்போதும் இலங்கைக்கு நெருக்கமாக இருக்கும் என்றுள்ளது.

## மாகாண....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய தகவல்கள் எதுவுமில்லை' எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இருநாள் அரசுமுறைப் பயணமொன்றை மேற்கொண்டு திங்கட்கிழமை கொழும்பை வந்தடைந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை (23) பி.ப 3.00 மணிக்கு கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சிவஞானம், நாடாளுமன்றக்குழுத் தலைவர் சிறிதரன், பொதுச்செயலாளர் சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆகியோரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் மற்றும் சுரேஸ் பிரேமசந்திரன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமாரும் பங்கேற்றிருந்ததுடன் இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவும் கலந்துகொண்டிருந்தார்.

சந்திப்பின் தொடக்கத்தில் 'தித்வா சூறாவளியினால் வட, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் மற்றும் உதவி வழங்கல் செயற்பாடுகள் தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கேட்டறிந்தார். அதற்குப் பதிலளித்த தமிழ்ப் பிரதிநிதிகள் மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் 3000 க்கும் மேற்பட்ட கால்நடைகள் அழிவடைந்திருப்பதாகவும், திருகோணமலையிலும் இதனையொத்த நிலைபதிவாகியிருப்பதாகவும் சுட்டிக்காட்டினர். எனினும் உதவிவழங்கல் நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், மாகாணசபைகள் இயங்குநிலையில் இல்லாததன் காரணமாக தாம் அவற்றில் உள்வாங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டனர்.

மாகாணசபைகள் இயங்குநிலையில் இருந்திருந்தால், இந்த உதவி வழங்கல் செயன்முறைகள் அதனூடாக ஒருங்கிணைக் கப்பட்டிருக்கும். ஆனால் இப்போது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு, பொதுத்தேர் தல்மூலம் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் களையும், நாம் ஆட்சியமைத்திருக்கும் உள்ளூராட்சி மன்றங்களையும் முழுமையாகப் புறக்கணித்துவிட்டு, 'பிரஜா சக்தி' எனும் பெயரில் ஏதோவொரு திட்டத்தை முன்னெடுத்துவருகின்றது. இருப்பினும் அது எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பது பற்றிய தகவல்கள் எதுவுமில்லை' என அவர்கள் கரிசனை வெளியிட்டனர்.

அதேபோன்றுதாம் ஆட்சிபீடமேறி ஒருவருட காலத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதாக வாக்குறுதி அளித்திருந்த ஆளும்தரப்பு, இன்னமும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என ஜெய்சங்கரிடம் சுட்டிக்காட்டிய தமிழ்ப்பிரதிநிதிகள், மாகாணசபைத் தேர்தலைப் பழைய முறைமையில் நடாத்துவதற்கு ஏதுவாக சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை குறித்தும் எடுத்துரைத்தனர். அதுமாத்திரமன்றி மாகாணசபை முறைமையை நீக்கிவிட்டு, நிறைவேற்றதிகாரமுள்ள ஆளுநர் முறைமை உள்ளிட்ட வேறு முறைமைகளை அறிமுகப்படுத்துவது குறித்து ஆளும்தரப்பு ஆராய்ந்துவருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

பேரிடர் சூழ்நிலையைக் காரணமாகக் குறிப்பிட்டு, ஆளும்தரப்பு மாகாணசபைத் தேர்தல்களைப் பிற்போடுவதற்கு இடமளிக்கக் கூடாது என வேண்டுகோள்விடுத்த அவர்கள், 'மாகாண சபைகள் என்பது இந்தியா பெற்ற பிள்ளை. நாங்கள் அதனை வளர்ப்ப வர்கள் மாத்திரமே. எனவே அதனைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு இந்தியாவுக்கு இருக்கின்றது. ஆகவே மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடாத்துமாறு ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுங்கள்' என்று வலியுறுத்தினர்.

அதேவேளை புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலும், அதற்குள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக பெயர் எதுவாக இருப்பினும், அர்த்தமுள்ள சமஷ்டி தீர்வு உள்வாங்கப்படுவதற்கும், உச்சபட்ச அதிகாரப்பகிர்வை மேற்கொள்வதற்கும் இந்தியா அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் எனவும் ஜெய்சங்கரிடம் தமிழ்த் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

மேலும் இச்சந்திப்பின்போது பலாலி அபிவிருத்தி குறித்து நீண்டநேரம் பேசப்பட்டது. அவ்விமான நிலையத்தை வர்த்தக ரீதியில் வருமானம் ஈட்டும் விமான நிலையமாக மாற்றியமைப்பதற்கு, வெறுமனே ஓடுபாதையை மாத்திரம் அபிவிருத்தி செய்வது போதுமானதன்று எனவும், மாறாக அதனை முன்னிறுத்தி பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியிருப்பதாகவும் அமைச்சர் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார். அத்தோடு காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி விவகாரத்தில் ஆளும்தரப்புக்கு அவசியமான அழுத்தங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும், அந்நடவடிக்கைகள் வெகுவிரைவில் தொடங்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இச்சந்திப்பின் முடிவில் மாகாணசபைத் தேர்தல்கள் இன்னமும் நடாத்தப்படாமை குறித்தும், அதனை நடத்துவதற்கான அழுத்தங்களை வழங்கவேண்டியதன் அவசியதையும் வலியுறுத்தி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணி இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதம் அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூட்டாகக் கையளிக்கப்பட்டது.

## வெளிப்படைத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணமாக கொழும்புக்கு வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையில் நேற்று செவ்வாய்கிழமை இந்திய இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போது, அண்மையில் இலங்கையைத் தாக்கிய தித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக இந்திய ஆளும்தரப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'சாகர் பந்து' திட்டத்திற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன், இந்திய ஆளும்தரப்பினால் நாட்டுக்கு 100 மில்லியன் டொலர் நன்கொடையாகவும், மேலும் 350 மில்லியன் டொலர் குறைந்த வட்டி சலுகைக் கடனாகவும் என மொத்தம் 450 மில்லியன் டொலர் நிதி வழங்கப்பட்டமைக்காக, இலங்கை மக்கள் சார்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் மற்றும் இந்திய ஆளும்தரப்பு உள்ளிட்ட ஒட்டுமொத்த இந்திய மக்களுக்கும் அவர் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

மேலும், 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரழிவில் பெரும் எண்ணிக் கையிலானோர் உயிரிழந்த போதிலும், அதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு முறையான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தை நோக்கி நகர முடியாமல் போனதாலேயே, இம்முறை இலங்கையைத் தாக்கிய ' தித்வா 'சூறாவளியினால் அதிகளவானோர் உயிரிழந்தனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். இனியாவது இதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, நாட்டுக்குத் தேவையான சரியான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தையும் அமைச்சையும் உருவாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர், 1999 ஆம் ஆண்டு இந்தியாவின் ஒடிசா மாநிலத்தைத் தாக்கிய பெரும் சூறாவளியினால் 10,000 பேர் உயிரிழந்ததுடன் 180 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர் எனக் குறிப்பிட்டார். அதன் பின்னர் புதிய பேரிடர் தடுப்புத் திட்டங்கள் மற்றும் மேலாண்மை நடைமுறைகளை முன்னெடுத்ததன் காரணமாக, 2013 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சூறாவளிகளில் இருந்து முறையே 10 இலட்சம் மற்றும் சுமார் 12 இலட்சம் மக்களைக் காப்பாற்ற முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டினார். அத்தகைய பொறிமுறைகளை இலங்கையும் இனங்கண்டு பேரிடர் பாதிப்புகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்திய ஆளும்தரப்பு வழங்கிய உதவிகள் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் மக்களைச் சென்றடைய வேண்டும் என இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் வலியுறுத்தியதுடன், அதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் வழங்கக்கூடிய அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குவதாக சஜித் பிரேமதாச உறுதியளித்தார். இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமாறு இந்திய அயலுறவுத்துறை அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கௌரவத்துடன் கோரிக்கை விடுத்தார்.

## இலங்கை...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று (23) காலை அரசுத் தலைவர் செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் முன்னுரிமைகளை அடையாளம் கண்டு, மீளக் கட்டியெழுப்பும் அவசர தேவைகளை நிவர்த்தி செய்வதில் இந்தியா தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட உள்ளதாவும் அதன்படி இலங்கைக்கு 450 மில்லியன் டொலர் சலுகைப் பொதியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார். இதில், 100 மில்லியன் டொலர் இந்திய உதவி என்பதோடு மீதமுள்ள தொகை சலுகை வட்டி விகிதத்தின் அடிப்படையிலான கடனாகும்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவின் தலைமையின் கீழ் இலங்கை மிக விரைவில் மீண்டு வரும் என்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய ஆளும்தரப்பு நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர், இலங்கையின் மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துடன் இந்தியா முன்னெப்போதையும் விட அதிக அர்ப்பணிப்புடன் கைகோர்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் அரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்ட விசேட கடிதத்தையும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் அரசுத் தலைவரிடம் கையளித்தார்.

தித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் உதவி மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளுக்கும், இயல்பு

தொடர்ச்சி 8ம் பக்கம்...


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கணக்காய்வாளர் நாயகத்தின் உடனடி நியமனம் அவசியம்

கணக்காய்வாளர் நாயகம் (Auditor General) பதவி என்பது ஒரு நாட்டின் நிதி ஒழுங்கு, பொறுப்புணர்வு, வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் மையமாக விளங்கும் அரசியல் சார்பற்ற உயர் பதவி ஆகும். அந்தப் பதவி எட்டு மாதங்களாக நிரந்தரமாகவும், கடந்த இரண்டு வாரங்களாக தற்காலிகமாகவும் வெற்றிடமாக இருப்பது, இலங்கை போன்ற கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நாட்டில் மிகவும் ஆபத்தான அரசியல்—நிர்வாக வெற்றிடமாகவே பார்க்கப்பட வேண்டும்.

அரசுத் தலைவர் அனுரகுமார, கணக்காய்வாளர் நாயகம் பதவிக்காக இதுவரை நான்கு பேரின் பெயர்களை அரசமைப்புச் சபைக்கு (Constitutional Council) சமர்ப்பித்துள்ளார். ஆனால் அந்த நான்காவது நியமனமும் கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டது. இராணுவத்தின் கணக்காய்வுப் பிரிவைச் சேர்ந்த ராஜசிங்கே என்பவரின் பெயரை பிரதமர் ஹரினி முன்மொழிந்திருந்த போதிலும், பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புச் சபையில் நான்கு உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே அவருக்கு கிடைத்தது. அவ்வாறு ஆதரித்தவர்கள் பிரதமர் ஹரினி, அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதம்பாவா, சிறீதரன் மற்றும் பிரதமர் ஆகியோரே.

மாறாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா மற்றும் அரசமைப்புச் சபையின் மூன்று மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த நியமனத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர். இராணுவ அதிகாரி ஒருவர் சிவில் கணக்காய்வுத் துறையின் உச்சப் பதவியை ஏற்கக் கூடுமா என்ற அடிப்படைக் கேள்வி இதன் பின்னணியில் உள்ளது.

இதற்கு முன்னர், இலங்கை பெற்றோலியக் கழகத்தின் கணக்காய்வு அதிகாரியான எச்.டி.பி. சந்தனாவின் பெயர் நிராகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேசிய கணக்காய்வுத் துறையின் மூத்த அதிகாரியான தர்மபால கம்மன்பிள்ளை தற்காலிக கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். ஆனால் அவரது காலக்கெடு நீட்டிப்பும் அரசமைப்புச் சபையால் மறுக்கப்பட்டது. பின்னர் மூத்த துணை கணக்காய்வாளர் நாயகமான ஜெயரத்னாவின் பெயரும் நிராகரிக்கப்பட்டது. இதன் விளைவாக, இன்று தேசிய கணக்காய்வு அலுவலகமே தலைமை இன்றி செயலிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலை சாதாரண காலத்தில்கூட கவலையளிப்பதாக இருக்கும். ஆனால் நாடு தற்போது பெரும் இயற்கைப் பேரிடரின் பின்விளைவுகளை எதிர்கொண்டு வரும் நேரத்தில் இது மிகுந்த அபாயகரமானது. 'தித்வா' புயல் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம், மத்திய மலைநாட்டில் நிகழ்ந்த நிலச்சரிவுகள் ஆகியவை கோடிக்கணக்கான மக்களை பாதித்துள்ளன. இந்நிலையில் அரசு ஒரு பெரிய உதவி மற்றும் மறுசீரமைப்பு திட்டத்தை அறிவித்துள்ளது. வீடுகளை சுத்தம் செய்வதற்கும், அத்தியாவசிய உபகரணங்களை வாங்குவதற்குமான ஆரம்ப நிதியை டிசம்பர் 31க்கு முன்னர் வழங்க வேண்டும் என அரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த அவசரத்தன்மை மனிதாபிமான ரீதியில் பாராட்டத்தக்கதுதான். ஆனால் அவசரம் என்ற பெயரில் கண்காணிப்பு தளர்த்தப்படும்போது, ஊழலுக்கும் முறைகேடுகளுக்கும் வாய்ப்புகள் அதிகரிப்பது இயற்கையான உண்மை. குறிப்பாக கிராம மட்டத்தில் நடைபெறும் பணப் பரிவர்த்தனைகளை உயர் அதிகாரிகள் கண்காணிப்பது மிகவும் கடினமாகும்.

இதற்கிடையில், 'தித்வா' புயலின் பின்விளைவுகளை கையாள அரசு 'அரசு பேரழிவு உதவி நிதி' மற்றும் 'ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதி' என இரண்டு நிதிகளை உருவாக்கியுள்ளது. இந்நிதிகள் ஒருங்கிணைந்த நிதி (Consolidated Fund) கட்டமைப்பிற்கு வெளியே உருவாக்கப்பட்டுள்ளமை, அவற்றின் சட்டப்பூர்வத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து தீவிர சந்தேகங்களை எழுப்பியுள்ளது. பொது நிதி மேலாண்மைச் சட்டத்தின் விதிகளுக்கு இந்நிதிகள் உட்படுகிறதா என்ற கேள்வியை நிதி நிபுணர்களும், எதிர்க் கட்சியினரும் ஏற்கனவே எழுப்பியுள்ளனர்.

பொது நிதி குழுத் தலைவர் ஹர்ஷ டி சில்வா, 2004 சுனாமிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட 'ஹெல்பிங் அம்பாந்தோட்டா நிதி' விவகாரத்தை நினைவூட்டியபடி, 'ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதி' நாடாளுமன்ற அனுமதியுடன் சட்டபூர்வ நிதியாக அறிவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். அரசமைப்பின்படி, பொது நிதிகளில் இறுதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உரியது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நிரந்தர கணக்காய்வாளர் நாயகம் இல்லாத இந்த நேரத்தில், அந்த வாதம் இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

தேசிய மக்கள் சக்தி (NPP) அரசின் நம்பகத்தன்மையையும் இந்த விவகாரம் நேரடியாக பாதிக்கக்கூடும். முன்னாள் சபாநாயகர் ஆசோக ரண்வலாவின் கலாநிதிப்பட்ட விவகாரம், சில அமைச்சர்களின் கருத்துத் தவறுகள் போன்றவை பேசப்பட்டாலும், ஜனதா விமுக்தி பெரமுன (JVP) தலைமையிலான இந்த அரசியல் அணியின் 'களங்கமற்ற' படிமம் இன்னும் பெரிதாகச் சிதையவில்லை. ஆனால் கணக்காய்வாளர் நாயகம் பதவியை நிரப்புவதில் தொடரும் இந்தத் தடுமாற்றம், சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அந்த நற்பெயரையே நிரந்தரமாகக் கறைபடுத்தும் அபாயம் உள்ளது.

எனவே, அரசியல் கணக்குகள், பிடிவாதங்கள், சின்னச் சின்ன அதிகாரப் போட்டிகளைத் தாண்டி, இலங்கையின் நிதி பாதுகாப்பு மற்றும் ஜனநாயக நம்பகத்தன்மையை முன்னிறுத்தி, அரசமைப்புச் சபையுடன் உடன்பாட்டை ஏற்படுத்தும் ஒரு தகுதியான, அரசியல் சார்பற்ற கணக்காய்வாளர் நாயகத்தை உடனடியாக நியமிப்பது அரசின் தவிர்க்க முடியாத கடமையாகும். அது செய்யப்படாவிட்டால், இந்த வெற்றிடம் நிரப்பப்படாததன் விலை, நாட்டின் பொருளாதாரமும், அரசியல் நம்பிக்கையும் சேர்த்தே செலுத்த வேண்டியதாகிவிடும்.

# மற்றுமொரு போதைக் கப்பலும் தெற்குக் கடலில் மடக்கப்பட்டது

தெற்கு கடற்பரப்பில் போதைப்பொருளுடன் பயணித்துக் கொண்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் ஆழ்கடல் மீன்பிடிபடகொன்று, கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று (23) கடற்படையினரால் மறித்துக் கைப்பற்றப்பட்டது.

இலங்கையின் தெற்கு கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த சந்தேகத்திற்கிடமான மீன்பிடிப் படகு ஒன்றை கடற்படையினர் நேற்று (23) சுற்றிவளைத்தனர். கடற்படைக்குக் கிடைத்த உறுதிப்படுத்தப்பட்ட தகவலுக்கமைய, தெற்கு கடற்பரப்பில் விசேட நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து இந்தப் படகைக் கைப்பற்றியிருந்தனர்.

குறித்த படகில் பெருமளவான போதைப் பொருள் இருப்பதாகக் கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காகப் படகு கரைக்குக் கொண்டுவரப்ப டவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# மந்த போசனைக் குறையை நீக்க சிறார்களுக்கு 'யுனிசெவ்' உதவி

தித்வா ' சூறாவளியை அடுத்து ஏற்பட்ட பேரிடரினால் மந்தபோசணை குறைபாட்டுக்கு முகங்கொடுத்திருக்கும் சிறுவர்களுக்கு உதவும் நோக்கில் 20,000 கிலோகிராம் யணே-5 எனும் போசணைப் பதார்த்தம் யுனிசெப் அமைப்பினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

தித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றம் மண்சரிவு பேரிடர்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமாத்திரமன்றி போதியளவு போசணைப் பதார்த்தங்கள் அடங்கிய உணவுப்பொருட்கள் கிட்டாமையினால் சிறுவர்கள் மத்தியில் மந்தபோசணை நிலை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாக சுகாதாரத்துறை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் 6 மாதக் குழந்தைகள் தொடக்கம் 5 வயது வரையான சிறுவர்கள் மந்தபோசணையினால் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான 25,000 கிலோகிராம் யணே-5 எனும் போசணைப் பதார்த்தம் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள யுனிசெப் அலுவலக அதிகாரிகளால் சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கையளிக்கப்பட்டது.

# சர்ச்சைக்குரிய மருந்து குறித்து விசாரணைகள் முன்னெடுப்பு

## அமைச்சர் நளிந்த அறிவிப்பு

'ஒன்டன் செட்ரோம் தடுப்பு மருந்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக விசேட வைத்திய நிபுணர் தலைமையில் தனியான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினால் தரப்படும் அறிக்கைக்கமைய இந்த விவகாரத்தில் எவரேனும் குற்றமிழைத்திருந்தால் அவர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒன்டன் செட்ரோம் தடுப்பு மருந்து தொடர்பில் தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் இரு இறப்புக்கள் பதிவாகியுள்ளன. உயிரிழந்த இரு பெண்களும் காய்ச்சலுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இறப்பு ஏற்படக் கூடியளவுக்கு நோய் அறிகுறிகள் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவேதான் இவர்களுக்கு வழங்கப்பட்ட ஒன்டன் செட்ரோம் தடுப்பு மருந்து வழங்கியதால் ஏற்பட்ட ஒவ்வாமையால் அவர்கள் உயிரிழந்தனரா என்ற சந்தேகம் ஏற்பட்டது. இந்த இறப்புகள் தொடர்பில் எமது கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவை இடம்பெற்றிருக்கக் கூடாத இறப்புக்கள் ஆகும். அந்த அடிப்படையில் இவை குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த மருந்தினால்தான் குறித்த இரு பெண்களும் உயிரிழந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வெவ்வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து ஆராய்வதற்காக விசேட வைத்திய நிபுணர் தேதுரு டயஸ் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவிடம் இரு வாரங்களுக்குள் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைக்கமைய இந்த மருந்தில் பிரச்சினை இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் குறித்த மருந்து தயாரிப்பு நிறுவனம் மற்றும் அதன் தேசிய முகவர் நிறுவனத்துக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அது மாத்திரமின்றி இவ்வாறு மருந்துகளை பாவிப்பதால் ஒவ்வாமை ஏற்படும் போது அவற்றை பாவனையிலிருந்து நீக்குவதில் ஏதேனும் கால தாமதம் ஏற்படுகின்றதா என்பது குறித்தும் ஆராயப்படுகிறது.

டிசெம்பர் 12 முற்பகல் 10 மணியளவில் கண்டி வைத்தியசாலையிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய இந்த மருந்தை பாவனையிலிருந்து நீக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைய செயற்படாமை தொடர்பில் ஏதேனும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதா என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் ஏதேனும் குற்றமிழைக்கப்பட்டிருந்தால், அதற்கான கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நிலைப்பாட்டில் எந்த தளர்வுகளும் இல்லை. இதனைக் கொண்டு அரசியல் இலாபமீட்ட முயற்சிப்பவர்களுக்கு அதற்கு இடமளிப்பதற்கும் ஆளும்தரப்பு தயாராக இல்லை - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அடுத்த ஆண்டிலும் மாணவருக்கு சுரக்சா காப்புறுதித் திட்டம் அமுல்

சுரக்சா மாணவர் காப்புறுதியை 2025/26 ஆண்டில் அமுல்படுத்த ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளால் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படுகின்ற மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு வசதியளிக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படுத்தியுள்ள 'சுரக்சா' மாணவர் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கோப்பரேசன் ஜெனரல் லிமிட்டட் உடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

அதன் மூலம், அரச பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் விசேட உதவிப் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற 40 இலட்சம் மாணவர்களுக்கு சுகாதாரக் காப்புறுதி, விபத்துக் காப்புறுதி மற்றும் ஆயுள் காப்புறுதி வகுதிகளின் கீழ் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது அடையாளங் காணப்பட்டுள்ள பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு, கீழ்க்காணும் திருத்தங்களை உட்சேர்த்து, 'சுரக்ஷா', மாணவர் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தை 2025ஃ26 ஆண்டில் அமுல்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அதற்கமைய, ஏற்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை வெளியிடுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு, அதற்காக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

2025/26 ஆண்டுக்குரிய 'சுரக்சா' மாணவர் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் 2026.08.31 வரை நடைமுறைப்படுத்தல், பெற்றார் உயிரிழப்பின் போது வழங்கப்படும் அனுகூலங்களை வழங்கும் போது கருத்தில் கொள்ளப்படும் குறைந்த வருமானம் கொண்ட வகுதியின் ஆண்டுக்கான வருமானம் 180,000/- ரூபா தொடக்கம் 240,000/- ரூபாவாக திருத்தம் செய்தல், விகாரமடைந்த முதுகெலும்பை நேர்த்தி செய்வதற்கு அணிகின்ற கருவி மற்றும் செவிப்புலக் கருவிக்கு 75,000/- ரூபா வரை அனுகூலங்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீவிர நோய் வகுதிக்குட்பட்ட நோய்களுக்காகவும், மேலும் அடையாளங் காணப்பட்ட 07 நோய்களுக்காக நீண்டகாலமாக சிகிச்சைகளைப் பெற்று வரும் மாணவர்களுக்கு 20,000/- ரூபா வரை அனுகூலங்களை வழங்கவும், தீவிர நோய்ப் பட்டியலில் மேலும் சில நோய்களைச் சேர்த்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 'தித்வா' பாதிப்பு தொடர்பில் முழுமையான அறிக்கைக்கு 3 மாதங்களேனும் எடுக்கும்

உலக வங்கி தற்போது வெளியிட்டிருப்பது ஆரம்ப கட்ட மதிப்பாய்வு அறிக்கையாகும். முழுமையான மதிப்பாய்வு அறிக்கையை தயாரிப்பதற்கு 3 மாதங்களேனும் செல்லும். பாதிப்புக்கள் குறித்த முழுமையாக அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அதற்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

அரசஉத்தியோகத்தர்கள்சுற்றி நிரூபங்களுக்கமையவே பணியாற்றுகின்றனர். 25 000 கொடுப்பனவு வழங்குதல் தொடர்பில் தெளிவான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய பெரும்பாலான மாவட்டங்களில் 90 சதவீதம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. சில பிரதேசங்களில் மாத்திரமே இந்த கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அடுத்த வாரத்துக்குள் முழுமையாக இந்த கொடுப்பனவுகளை வழங்க முடிக்க எதிர்பார்த்துள்ளோம்.

மலையகம் உட்பட ஏனைய பகுதிகளில் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். பதுளை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தற்போது மீண்டும் மண்சரிவு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. அதனால் தான் அவர்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கூடிய விரைவில் அவர்களது சொந்த இல்லங்களில் மீளக் குடியமர்த்த வேண்டும் என்பதே ஆளும்தரப்பின் எதிர்பார்ப்பாகும். எவ்வாறிருப்பினும் பாதுகாப்பற்ற இடங்களில் அவர்களை குடியேற்ற முடியாது. அதுவரை அவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கான நிதி பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசுத் தலைவர்யும் இவ்விடயத்தில் நேரடியாக அவதானம் செலுத்தியுள்ளார். எனவே இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்.

பாதிப்புக்கள் குறித்து இன்னும் முழுமையான மதிப்பீடுகள் செய்யப்படவில்லை. உலக வங்கியின் ஒத்துழைப்புடன் இந்த மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசுத் தலைவர் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் தெரிவித்திருந்தார். அதற்கமைய ஆரம்ப மதிப்பீடாகவே 4.1 பில்லியன் பாதிப்புக்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முழுமையான மதிப்பாய்வு அறிக்கையை தயாரிப்பதற்கு சுமார் 3 மாதங்களேனும் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.



## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இந்தியப் பிரதமரும் அரசாங்கமும் அளித்த மனப்பூர்வமான ஆதரவை அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நன்றியுடன் பாராட்டினார்.

மீட்புப் பணிகளுக்கு ஹெலிகொப்டர்கள், மருந்துகள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும், சேதமடைந்த வீதிகளை மீளமைப்பதிலும், மகியங்கனை வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலை கட்டமைப்பை மறுசீரமைப்பதிலும் இந்திய ஆளும்தரப்பு அளித்த விசேட ஆதரவையும் அரசுத் தலைவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

ஒவ்வொரு கடினமான சமயத்திலும் இந்தியா இலங்கைக்கு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவை அரசுத் தலைவர் ஞாபகமூட்டியதோடு பேரழிவுக்குப் பிறகு இலங்கையின் மீளமைப்பு செயற்பாட்டிற்கு வழங்கும் ஒத்துழைப்பு இந்திய-இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கடினமான சமயத்தில் இலங்கையுடன் பலமாக இணைந்திருக்கவும், இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளை வழங்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனக்கு அறிவுறுத்தியதாகவும், அந்த முயற்சிகளை ஆராய்வதற்காக இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு தான் வருகை தந்தார் எனவும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்கும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுக்கள் தொடங்கவுள்ளதோடு, இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

அரசுத் தலைவருக்கும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சருக்கும் இடையிலான பேச்சுக்களில் அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளில், இந்திய ஆளும்தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் புனித் அக்ரவால், இந்திய பிரதி உயராணையர் சத்யஞ்சல் பாண்டே மற்றும் இலங்கை ஆளும்தரப்பின் சார்பாக அரசுத் தலைவரின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, அரசுத் தலைவரின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆளும்தரப்புடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராதாகிருஷ்ணன், தேசிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மிக மோசமான இயற்கை பேரிடர்களில் இருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு இந்திய ஆளும்தரப்பு துரிதமாக வழங்கிய ஒத்துழைப்புக்கு மலையக தமிழ் பிரதிநிதிகள் இதன்போது மனமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

பேரிடர்களால் முழுநாடும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மலையகம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புக்களை தமிழ் பிரதிநிதிகள் இதன்போது இந்திய அயலுறவுத்துறை அமைச்சருக்கு சுட்டிக்காட்டினர்.

மலையக மக்களின் காணி மற்றும் வீட்டு உரிமை தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டு விடயங்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டதுடன், முன்வைக்கப்பட்ட விடயங்களை அவதானித்ததன் பின்னர் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர்

'மலையக மக்களுக்கான வீட்டுத்திட்டத்தில் இந்தியா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும். ஆளும்தரப்புடன் பேச்சு நடத்திக் காணிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள், வீடுகளை கட்டுவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்ட மக்களின் சுகாதாரம், கல்வி உட்பட பல்வேறு அடிப்படை பிரச்சினைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இச்சந்தர்ப்பத்தில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சரிடம் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார சந்தித்து பரந்துபட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தையும் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் இந்திய அனுசரணையுடன் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட 'பெய்லி' பாலம் அரசுத் தலைவர் அநுரகுமார முன்னிலையில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் ஆகியோரால் மெய்நிகர் முறைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

தித்வா சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு பேரிடர்களின் விளைவாக நாடளாவிய ரீதியில் முக்கிய வீதிகள், பாலங்கள், தண்டவாளங்கள் என போக்குவரத்துக்கும், இணைப்பைப் பேணுவதற்கும் அவசியமான உட்கட்டமைப்புக்கள் முழுமையாகவும், பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அவ்வாறு முடங்கியிருக்கும் வீதிப் போக்குவரத்தைச் சீரமைக்கும் வகையில் 'பெய்லி பிரிட்ஜ்' எனப்படும் தற்காலிக பாலங்களை அமைப்பதற்கு அவசியமான உதவிகள் இந்தியாவினால் வழங்கப்பட்டன.

'பெய்லி பிரிட்ஜ்' என்பது இரும்பினாலான பகுதிகளை உரிய இடங்களில் பொருத்தி தற்காலிகமாக நிர்மாணிக்கப்படும் பாலமாகும்.

அதன்படி இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 'பெய்லி' பாலத்தொகுதிகளைப் பயன்படுத்தி, இந்திய இராணுவப் பொறியியலாளர்களினால் கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ள 120 அடி நீளமான பாலமே நேற்றைய தினம் அமைச்சர்களான ஜெய்சங்கர் மற்றும் விஜித்த ஹேரத்தினால் மெய்நிகர் முறையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

## அரசமைப்புச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடையாக செயற்படாமல், அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரசமைப்பு சபையை கோருகிறார் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு நிரந்தமான கணக்காய்வாளர் ஒருவர் அவசியமாகும். எனவேதான் அரசுத் தலைவர் அநுரகுமாரவால் பொருத்தமான தகுதிகளுடையவர்களது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. இது தொடர்பில் அரசமைப்பு சபையே இறுதித் தீர்மானத்தை எடுக்கவேண்டும். அரசுத் தலைவர் பரிந்துரைத்துள்ளவர்கள் தொடர்பில் ஏதேனும் சிக்கல் காணப்படுமாயின் அதனைக் கூறவேண்டும்.

அவ்வாறன்றி முன்வைக்கப்படும் பெயர்கள் தொடர்ந்தும் நிராகரிக்கப்படும் பட்சத்தில் இந்த்தத துறை தொடர்ந்தும் வீழ்ச்சிப்பாதையிலேயே செல்லும். அரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் நாடு தொடர்பில் பெரும் பொறுப்பு காணப்படுவதைப் போன்று, அரச பொறிமுறையைக் கொண்டு செல்வதில் அரசமைப்புச் சபைக்கும் தவிர்க்க முடியாத பொறுப்பு காணப்படுகிறது.

இதனை அரசமைப்புச் சபை புரிந்துகொள்ள வேண்டும். இது விளையாட்டல்ல. எனவே நாடு குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்போது அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அரசுத் தலைவர் மிகத் தகுதியானவர்களது பெயர்களையே பரிந்துரைத்துள்ளார். ஆனால் அரசமைப்புச் சபை அதற்கமைய செயற்படாத நிலைமையே காணப்படுகிறது. எனவே வெகு விரைவில் அரசமைப்புச் சபையின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமது பொறுப்பை சரிவர நிறைவேற்றுவர் என எதிர்பார்க்கின்றோம்.

அரசமைப்பு சபை உள்ளிட்டவை நாடு முன்னோக்கிப் பயணிக்கும் போது அதனை தடுப்பதற்காக நிறுவப்பட்டவையல்ல. மாறாக அவற்றை மேலும் வலுப்படுத்தி நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காகவேயாகும். எனவே கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு ஒத்துழைப்பு

## ஜெய்சங்கரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இருநாள் அரசுமுறைப் பயணமொன்றை மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதந்திருக்கும் இந்திய அயலுறவுத்துறை அசை;சர் ஜெய்சங்கர் நேற்று செவ்வாய்க்கிழமை (23) காலை அரசுத் தலைவர் செயலகத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடினார். அவரைத் தொடர்ந்து அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தையும் சந்தித்துப்பேசிய ஜெய்சங்கர், அதனையடுத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு செய்தியாளர்கள் சந்திப்பிலும் கலந்துகொண்டார். அச்சந்திப்பில் விஜித்த ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்புக்கு மீண்டும் வருகைதந்திருக்கும் ஜெய்சங்கரை அன்புடன் வரவேற்கின்றேன்.

தித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பேரிடர் நிலைமையைத் தொடர்ந்து, இவ்வேளையில் இலங்கையுடனான இந்தியாவின் வலுவான ஒற்றுமையை அடிக்கோடிட்டுக் காண்பிக்கும் வகையில் அமைந்திருக்கும் ஜெய்சங்கரின் வருகை பாராட்டுக்குரியது. இந்தப்பயணம் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்பு மற்றும் நீடித்த கூட்டாண்மையின் பிரதிபலிப்பாகும். அதுமாத்திரமன்றி 'ஒப்பரேஷன் சாகர் பந்து' உதவித் திட்டத்தை சரியான தருணத்தில் நடைமுறைப்படுத்தியதன் ஊடாக அவசரநிலைக்கு முகங்கொடுத்திருந்த எமது நாட்டுக்கு முதலில் உதவிய இந்தியாவின் பங்கையும் இது வெளிக்காட்டுகின்றது.

இலங்கை முகங்கொடுத்திருந்த பொருளாதார ரீதியான சவால்களை எதிர்கொள்வதற்கு இந்தியா அளித்த விலைமதிப்பற்ற ஆதரவுக்காக அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, இலங்கை ஆளும்தரப்பு மற்றும் மக்கள் சார்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கும், இந்திய அரசாங்கத்துக்கும், உங்களுக்கும் (ஜெய்சங்கர்) எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பெற்றோலியத்துக்கான இலகு கடன்கள், இருதரப்பு நாணயப் பரிமாற்றங்கள் மற்றும் கடன் பொறுப்பு ஒத்திவைப்பு என்பன மூலம் இந்தியாவினால் வழங்கப்பட்ட 4 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

புவியியல் ரீதியில் அண்மைய அமைவிடம், ஆழமான வரலாற்று மற்றும் கலாசார உறவுகள், பரஸ்பர கௌரவம், விரிவடையும் பொருளாதாரத் தொடர்புகள் என்பன உள்ளடங்கலாக இரு நாடுகளும் நீண்டகாலமாகப் பன்முகப்படுத்தப்பட்ட நல்லுறவைப் பேணிவருகின்றன.

அந்த வகையில் அவசர நிதியுதவி மற்றும் அந்நியச் செலாவணி ஆதரவு உள்ளிட்ட பலதரப்பட்ட உதவிகள் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதில் இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவையும், ஏற்கனவே உள்ள கடன்களின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கான கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கென வழங்கப்பட்ட 2066 மில்லியன் டொலர் பெறுமதி வாய்ந்த உதவியையும் நாங்கள் பெரிதும் மதிக்கின்றோம். அத்தோடு உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவுக்கு இணைத் தலைமை வகிக்கும் நாடாக, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயன்முறையை உரிய தருணத்தில் முடிவுறுத்துவதற்கு உதவிய இந்தியாவை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

இன்று (நேற்று) அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கும், ஜெய்சங்கருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது பொருளாதார மேம்பாடு, எரிசக்தி பாதுகாப்பு, போக்குவரத்து இணைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு, சுகாதாரம், கல்வி, கடல்சார் பாதுகாப்பு, டிஜிட்டல் ஒத்துழைப்பு, சுற்றுலா மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகளில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதேவேளை, பேரிடர் காலப் பகுதியில் இந்திய வழங்கிய 1000 தொன்களுக்கும் மேற்பட்ட உதவிப் பொருட்கள் பாதிக்கப்பட்ட சமூகங்களிடையே தாமதமின்றி விநியோகிக்கப்பட்டன. அத்தோடு இந்திய இராணுவத்தினரால் மஹியங்கனையில் நிறுவப்பட்ட கள மருத்துவமனை, சுமார் 10 தொன் அவசர மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டமை, நாட்டுக்கு 4 தொகுதிகளாகக் கொண்டுவரப்பட்ட 228 தொன் 'பெய்லி' பாலத் தொகுதிகள் உள்ளடங்கலாக இந்தியாவினால் வழங்கப்பட்ட சகல உதவிகளுக்கும் இவ்வேளையில் நன்றி கூறுகின்றோம்.

இலங்கையின் மீட்பு மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு அர்த்தமுள்ள ஆதரவை வழங்கும் வகையில் மேலதிக உதவித் தொகுப்பின் அறிவிப்பை வெளியிடுவதற்கான உத்தேசத்துடன் இடம்பெற்றிருக்கும் ஜெய்சங்கரின் வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நடவடிக்கையின் மூலம் இந்திய மீண்டும் அதன் வலுவான நட்பையும், ஒற்றுமையையும் நிரூபித்துள்ளது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City






### உள்ளக வசதிகள்
- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

0777 43 55 57



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2025இல் வெளியிடப்பெற்றது